Regd. No. M. 4593. "KUDI ARASU" 8 பக்கங்கள்

# குடி அரசு

Estd. 1924.

வருட சந்தா ரூ. 5. சனி வெளியீடு. தனிப்பிரதி விலை ரூ. 0-1-6
சிலோனில் ,, ரூ. 0-2-0

மாலை 17 } ஈரோடு, 22-7-1944 ஆடி-மீ 7உ { மலர் 41

## பேரளத்தில் பெரியார்

### திருமணத்தில் சொற்பொழிவு

பேரளத்தில் 12-7-44 தேதி தோழர் என். மகாதேவன் அவர்கள் புதல்விகளுக்கு நடைபெற்ற திருமணத்தின் போது பெரியார் ஆற்றிய சொற்பொழிவு வருமாறு:—

தோழர்களே!

இப்போது நடைபெறும் திருமணத்தில் நாம் ஒன்றும் பெரிய மாறுதலைக் காணவில்லை. தலைகீழாக ஒன்றும் நடைபெறப் போவதில்லை. ஒரு சிறிய மாறுதல் மட்டும் உண்டு. மாறுதல்கள் இயற்கையாகவே பல இனங்களாலே பல இடங்களிலே இன்று கையாளப்பட்டுத் தான் வருகிறது.

இங்கே நாம் என்ன மாறுதலைக் காண்கிறோம்? சடங்கில்லை, வேறு இனத்தவன் எவனும் மணத்தை நடத்துவதில்லை. சுயமரியாதைக்கும் பகுத்தறிவிற்கும் இயற்கைக்கும் பொருந்திய மணம் வேண்டுகிறோம். அப்படிப்பட்ட இந்தத் திருமணத்தை நாஸ்திகத் திருமணம் என்று பலர் சொல்லக்கூடும். மற்றும், நமது தாய்மார்கள் "கலியாணம் அய்யர் இல்லை என்றாலும் அம்மியாவது இருக்கக் கூடாதா நெருப்பாவது (ஓமம்) இருக்கக்கூடாதா, விளக்காவது இருக்கக் கூடாதா" என்றெல்லாம் சொல்லுவார்கள். நமக்குப் பார்ப்பனர் மீதோ, அம்மி மீதோ, நெருப்பின் மீதோ, குத்து விளக்கின் மீதோ, தனிப்பட்ட வெறுப்பு ஒன்றுமில்லை. நெருப்பு அடுப்பில் இருக்க வேண்டியதுதான். அம்மி அரைக்கப் பயன்படட்டும். இரவில் விளக்கு இருக்கட்டும். ஒவ்வொன்றும் பயன்படவேண்டிய இடத்தில் இருக்கட்டும், பகுத்தறிவிற்கும், நம் தன்மானத்திற்கும் முரண்பட்ட எதையும் நீக்கவேண்டும் என்று தான் சொல்லுகிறோம்.

ஒவ்வொன்றிற்கும் 'ஏன்' என்ற கேள்வியைப் போட்டு ஆராய்ச்சி நடத்தும் காலம் இது. மனிதனுக்கு எவ்வளவு [illegible]

பொருந்துதான் ஓர் பொருளுக்கு மதிப்பு வருகின்றது. இதற்காகத்தான் நாம் உழைக்கிறோம்.

இந்தத்திருமணத்தின் முதல் வெற்றி, பார்ப்பனன் இல்லாதது. ஆதலால், இதை சுயமரியாதைத் திருமணம் என அழைக்கிறோம். தான்தான் உயர்ந்த சாதி என்ற ஆணவங்கொண்டு, நம்மை தொடாதே, கூட உட்கார்ந்து சாப்பிடாதே என்று சொல்லும் ஒருவனை மணையில் உட்காரவைத்து காரியம் நடத்தினால் தமிழனுக்கு மானமுண்டு என்று சொல்ல முடியுமா?

இரண்டாவது வெற்றி என்னவென்றால், இது பகுத்தறிவுத் திருமணம். பகுத்தறிவு என்று சொல்லுவதும் மாறி மாறிவருவதாகும். இன்று நாம் எவைகளை அறிவுக்குப் பொருத்தமானவை என எண்ணுகிறோமோ, அவை நாளைக்கு மூடப்பழக்கங்கள் என தள்ளப்படும். நாம் கூட பல பொருள்களை, ஏன், 'மகான்கள்' என்று புகழப்படுபவர்கள் சொன்னவற்றையே, பழைய கருத்துக்களெனத் தள்ளிவிடவில்லையா. அது போலத்தான், நமது பின்னோர்கள் என்னைக் குறித்துக்கூட 'ஓர் காலத்தில் இராமசாமி என்ற மூடக் கொள்கைக்காரன் இருந்தான்' என்று சொல்லுவார்கள். அது இயற்கை. மாற்றத்தின் அறிகுறி. காலத்தின் சின்னம். எனவே பழைய காலத்தைச் சேர்ந்தவை என்பதற்காக நாம் குறை கூறவில்லை, அவர்கள் காலத்துக்கு அவர்கள் செய்தது சரி என்பதானாலும் அப்போது அவ்வளவுதான் முடிந்தது என்பதானாலும் இன்று மாறித்தான் ஆக வேண்டும். சக்கிமுக்கிக் கல்லினால் முதலில் நெருப்பை உண்டாக்கியவன் அந்தக்காலத்து எடிசன். அப்புறம் படிப்படியாக முன்னேற்றமாகி இப்போது மின்சாரத்தில் நெருப்பைக்காண்கிறோம். எனவே, மாற்றம் இயற்கையானது. அதை தடுக்க யாராலும் முடியாது. எத்தகைய வைதிகமும் மாற்றத்திற்கு ஆளாகித்தான் தீரவேண்டும். இப்போது நாம் எவ்வளவு மாறியிருக்கிறோம்? ஐம்பது வருடங்களுக்கு முன்பிருந்ததைவிட கடவுளைப் பற்றிய எண்ணம், தெய்வீக சக்தி படைத்தவர்கள் பெரிய மனிதர்கள் என்பவர்களைப்பற்றிய எண்ணம், வீடுவாசல், உடை உணவு, தெருக்கள், வண்டி, குடுமி வைத்தல் ஆகிய எவ்வளவோ எண்ணங்களில் பொருள்களில் பெரிய மாற்றத்தைக் காண்கிறோம். பெண்களின் புடவை, இரவிக்கை, நகைகள், புருஷன், பெண்ஜாதி முறை ஆகியவற்றில் ஏற்பட்ட மாறுதல்களைப் பாருங்கள்.

அடுத்தபடியாக இங்கு பொருட்செலவு அதிகமில்லை. நேரமும் பாழாவதில்லை. முன்பெல்லாம் பல நாட்கள் திருமணம் நடைபெற்றது. இப்போது பார்ப்பனர்கள் கூட 'one day only' அதாவது ஓர் நாள் திருமணம் என்பதாக அழைப்பிலேயே குறிப்பிடுகிறார்கள்.

மற்றும், இந்தத் திருமணத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் சமஉரிமை இருக்கின்றது. ஆரியரின் 8 வகைத் திருமண முறைகளில் ஒன்றில்கூட பெண் ஓர் உயிருள்ள பொருளாகக் கூட மதிக்கப்படுவதில்லை.

ஒத்த அன்பும், காதலும் ஏற்பட வேண்டுமென விரும்பினால், அந்த முறையில் நாம் மக்களை வளர்ப்பதில்லை. பக்குவம் வந்தவுடன் பெண்ணை அடைக்கிறோம். பெண்களுக்கு தக்க கல்வி அனுபவம் தருவதில்லை. இப்படிப்பட்ட பெண்களை தங்களுக்கு வேண்டியவைகளைத் தெரிந்தெடுத்துக்கொள்ளும்படி சொன்னால் டிராமா (நாடக) காரனைத்தான் தெரிந்தெடுப்பார்கள். அவர்களுக்குக் குழந்தை வளர்ப்பு முறையை கற்றுக் கொடுப்பதில்லை. மேல் நாடுகளில் சிறு குழந்தைகளுக்குக்கூட Fresh air அதாவது நல்ல காற்று முதலியவற்றின் அருமை தெரிகின்றது.

ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுக்கும் உரிமை இந்த நாட்டில் அறவே இல்லை. யாரோ தெருவில் போகும் பார்ப்பானைக்கூப்பிட்டுப் பொருத்தம் பார்க்கச் சொன்னால், அவனுக்கு மணமக்களைப்பற்றி என்ன தெரியும். அண்ணன், தம்பி ஆகிய இருவர் சாதகங்களை கொடுத்தால், ஒருவருக்கொருவர் கணவர் மனைவி ஆவதற்குப் பொருத்தம் சொல்லுவான். மனிதனுக்கும் நாய் குட்டிக்குங்கூட ஜாதகத்தில்பொருத்தம் [illegible]

## திருச்சியில் கிருபானந்த வாரி விரட்டப்பட்டார்

### கேட்ட கேள்விகளுக்குப் பதிலில்லை

### கூட்டம் குழப்பத்தில் முடிந்தது

(நமது நிருபர்)

16-7-44ல் நாகையில் தோன்றிய புரட்சிப்புயலால் விரட்டப்பட்ட தோழர் கிருபானந்தவாரி ஓடோடியும் திருச்சிக் கடைத்தெருவில் தன் புராணச்சரக்கை விற்க வந்தார். 19-7-44 புதன் மாலை 7-30க்கு நாற்றுக்கால் மண்டபத்தில் பக்த கோடிகட்குமுன் தன் திருப்புகழ் பிரசங்கத்தை ஆரம்பித்தார். இரண்டு நிமிடங்கள் நிம்மதியான கடவுள் வணக்கம். பின் இரண்டு கோஷ்டியினர் தனக்கு வழங்கப்பட்ட அச்சடித்த கேள்வித் தாளைக்கண்டு. அதே சமயத்தில் பல் வேறுத் தோழர்கள் கூடியிருக்க பலருக்கும்கேள்வித்தாட்கள்வழங்கினர். அமைதி, சேர்மை, கட்டுப்பாடு இவை அமைந்த அவர்கள் செயலைத் தடுக்க முனைந்த ஒன்றிரண்டு கூட்ட நிர்வாகிகளால் கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டது. மேடை மீதிருந்தவர்க்கும் கேள்வி கேட்டவர்க்கும் பலத்த விவாதம் நடந்தது. ஒருமணி நேரத்திற்குப் பின் ஓரளவு அமைதி நிலவியது. பிரசங்கியார் கேள்விக்குப்பதில் சொல்வதாக ஒப்புக்கொண்டார். ஆனால் பதில் எப்படியிருந்தாலும் அதை அனைவரும் ஒப்புக்கொள்ளவேண்டுமென்றார். அப்படிச் செய்யத்தாங்கள் ஆட்டு மந்தைகளல்ல என்றனர் கூட்டத்தினர்.

பின் 'அடியேன் தெரிந்த அளவு சொல்லுகிறேன்' என ஆரம்பித்தார். கேள்விக்குப் பதில் சொல்லாமல் தமிழ்பற்று மிக்கவர் போல் காட்டிக்கொண்டு பேச்சை வேறு வழியில் திருப்பினார். மீண்டும் 'கேள்விக்குப்பதில்' என்ற கூச்சல் கிளம்பியது. மீண்டும் குழப்பம் ஏற்பட்டது. நிர்வாகிகள் போலீசு உதவியை 'போன்' வழியாக நாடினர். கூட்டத்தில் முக்கால் பங்கினர் 'பேடி கிருபானந்த வாரியே! கேள்விக்குப் பதில்'

---

றால், பெயரைச்சொல்லச்சொல்லி பொருத்தம் பார்ப்பான். அதற்குமேல் பல்லி, கருடன் ஆகியவைகளின் ஒப்புதல்வேண்டும். வாழ்க்கையையே பிணைக்கக்கூடிய திருமணத்தில்இவ்வளவுபேதமை. அநேக "நல்ல பொருத்தங்கள்" என்பவைபெண்ணின் முதுகுக்கும் கணவனின் கைத்தடிக்கும் ஓயாதபொருத்தமாக முடிகின்றது. வரும் காலத்தில் வாலிபர்களுக்கும் பெண்களுக்கும் உரிமை தரவேண்டும். இல்லையென்றால், உரிமையுடனிருக்கப் போகும் அவர்கள் நம் தடைகளை விலக்கி முன்னேறுவார்கள். எனவே முதலிலேயே உரிமையளித்துவிடுவது நல்லது. [illegible] அனைவருக்கும் [illegible]

## வாரியார் கூட்டத்தில் தடியடி

### மூவர் கைது செய்யப்பட்டனர்

நாகப்பட்டினம்: தேசிய உயர் நிலைப் பள்ளியில் இரவு 10 மணிக்கு கிருபானந்த வாரியாரால் திருப்புகழ் சொற்பொழிவு நடத்தப்பட்டது. அது சமயம் கேள்வி கேட்பதாக, பல கேள்விகளை அச்சடித்து பொது மக்களுக்கு தன்மதிப்பியக்கத்தாரால் வழங்கி இருந்தபடி, கேள்வித்தாளை கிருபானந்த வாரியாரிடம் அமைதியாக கொடுத்து பதில் சொல்லும்படி கேட்கவே, பதில் சொல்ல முடியாமல் இனறு போலீஸ் தான் என்னைக் காப்பாற்ற வேண்டுமென்று, அருகே நின்று கொண்டிருந்த போலீஸ் சினியர் சப்இன்ஸ்பெக்டரையும், சப்இன்ஸ்பெக்டரையும் பார்க்கவே அமைதியாக கேள்வி கேட்ட தோழர்கள் தங்கவேலு, தினதயாளன், பக்கிரிசாமி ஆகியோர்களை கைது செய்து தோழர் சி. பி. சின்னராசு அவர்களையும், ஆர். வி. கோபால் மற்றும் பல தோழர்களையும் வெளியேற்றியதோடு வெளியே கூடியிருந்த பல தோழர்களை தடியால் அடித்து சுமார் 50, 60 போலீஸ்காரர்களை துப்பாக்கியுடன் நிறுத்தி கூட்டத்தை சீக்கிரமே முடித்துக் கொண்டார்கள். இது

---

என்னும் போது யார் வந்து தான் என்ன செய்வது? வந்திருந்த பக்த கூட்டம் வாட்டத்துடன் கூட்டத்தை விட்டு நழுவினர். ஆள் தப்பித்தால் போதுமென அவரும் (வாரியாரும்) வெளியே சென்று மறைந்தார். பின் கூட்டம் கலைக்கப்பட்டது என்றுரைத்தார் ஒருவர் சோகக் குரலுடன்.

பின் பெரியார் வாழ்க! வாரியின் புராணப்புளுகுகள் ஒழிக! என்ற பேரொலி முழங்க ஆர்வமான மக்கள் பலரும் ஊர்வலமாக கடைத்தெரு வழியாக புறப்பட்டனர். புரட்சி கண்டு மிரட்சி அடைந்த பார்ப்பன ஹோட்டல்கள் கதவடைத்துக்கொண்டன. ஊர்வலத்தினர் மணிக்கூண்டுக்கருகில் ஒன்று கூடினர். சுயமரியாதைத் தோழர்கள் பலர் பகுத்தறிவின் வெற்றியையும் புராணப் பொய்யின் தோல்வியையும்பற்றி விளக்கமாக வீரவுரைகள் நிகழ்த்தினர். இரவு 10-30க்கு வெற்றிக்கோஷங்களுடன் கூட்டம் கலைந்தது.

கிருபானந்த வாரியார் இவ்விதம் புறமுது கிட்டு ஓட ஓட்டப்பட்டதிற்குக்காரணம்பெரிதும் 16-7-44ல் நடந்ததிருச்சி மாவட்ட சுயமரியாதை மாநாட்டின் எதிரொலியே. ஸ்ரீரங்கம், பொன்மலை, திருச்சி தன்னுணர்வுத் தோழர்கள் தங்கள் கடமையைத் திறம்பட செய்து முடித்தனர். தமிழ்நாட்டினர் பலரும் [illegible]

சம்பந்தமாக D. S. P., A. D. S. P., பெரியார் ஈ. வெ. ரா. ஆகியோர்களுக்கு தந்தி கொடுத்திருக்கிறது.

(ஒரு நிருபர்)

* * *

## கிருபானந்தவாரியார் மறைந்தார்

(பின்னர் வந்த செய்தி)

16, 17, 18 ஆகிய மூன்று நாட்கள் தொடர்ந்து புராண பிரசங்கம் செய்வதாக விளம்பரப்படுத்தப்பட்டிருந்தபடி முதல் நாள் அதாவது 16-7-44 இரவு தன்மதிப்பியக்கத்தாரால் கேட்ட கேள்விகளுக்கு பதில் கூற முடியாது திணறியதும் அதனால் கிளர்ச்சி ஏற்பட்டதும் மூவர் கைது செய்யப்பட்டதும் தடி அடி தர்பார் நடந்ததும் யாவரும் தெரிந்தது. அதன் காரணமாக மறுநாள் 17-7-44 டி. எஸ். பி. அவர்களைக் கண்டு பேசி கைது செய்யப்பட்ட மூவர்களும் ஒருவித நிபந்தனையின்றி விடுவிக்கப்பட்டார்கள். அன்றிரவு நடக்க இருந்த பாரத பிரசங்கத்தில் கேட்கும் கேள்விகளுக்கு திருப்திகரமான பதிலைச் சொல்லச் செய்வதாக டி. எஸ். பி. அவர்கள் வாக்களித்ததின் பேரில் கேள்விகளை அமைதியாக கேட்கவும் பொதுமக்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டங்கள் வராமல் தானே முன்னின்று நடத்துவதாகவும் டி. எஸ். பி.யிடம் தோழர் சி. பி. சின்னராசு ஒத்துக்கொண்டார்.

ஆனால் 4-30 மணிக்கு மேல் கிருபானந்த வாரியார் மறைந்துவிட்டார் என்ற செய்தி காட்டுத் தீ போல் நகரெங்கும் பரவியது. மாயவரம் வழியாக காரில் ஏறிக்கொண்டு தன் சுய உருவத்தை மாற்றிக்கொண்டு ஓடியதாக வதந்தி. ஆனால் எந்தவிதமோ ஆள் இல்லை, புராணப்பிரசங்கம் நிறுத்தப்பட்டது.

அதே 17-7-44-ஆம் தேதி இரவு தேசிய உயர்நிலைப் பள்ளிக்கெதிரே நாகை தன்மதிப்பியக்கத்தாரால் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் சி. பி. சின்னராசு அவர்கள் புராணங்களின் ஆபாசங்களைப் பற்றியும், தோழர் கருணாநிதி அவர்கள் கிருபானந்த வாரியார் மறைவைக் குறித்தும் பேசினார்கள்.

## ராவ்சாகிப் பாலசுப்பிரமண்யம்

சென்னை: சென்னை சிறைச்சாலை சூப்ரண்டும் தோழர் இந்திராணிபாலசுப்பிரமண்யம் அவர்களின் கணவருமான ராவ்சாகிப் எம். பாலசுப்ரமண்யம் அவர்கள் இப்பொழுது குணமடைந்து வருகிறார். இன்னும் ஜெனரல் ஆஸ்பத்திரியில் இருந்து வருகிறார். தோழர் இந்திராணிபாலசுப்ரமண்யம் அவர்கள் ஆஸ்பத்திரியிலே இருந்து துணையாயிருந்து [illegible]

ரோஜா முத்தையா

## சென்னை சுயமரியாதை மாநாடு

கோகலே மண்டபத்தில் 30-7-44 ஞாயிறு காலை 9 மணிக்கு ஆரம்பம்.

தலைவர்: கும்பகோணம் தோழர் கே. கே. நீலமேகம்.

திறப்பாளர்: சேலம் தோழர் கனகம் மையார்.

கொடியேற்றுபவர்: கோலார் ஜே. வி. ஆதிமூலம்.

திராவிட நாட்டுப் படத்திறப்பு: கும்பகோணம் வி. சி. சின்னதம்பி.

சொற்பொழிவு: பெரியார் ஈ. வெ. ரா., சவுந்திரபாண்டியனார், சி. என். அண்ணாதுரை, அன்பழகன் முதலியவர்கள்.

சி. டி. நாயகம், வரவேற்புத்தலைவர்.

சி. கணேசம் விளம்பர அதிகாரி.

என். வி. நடராசன், காரியதரிசி.

சி. தங்கராஜ், என். எம். சுப்ரமண்யம் உதவிக் காரியதரிசிகள்.

* * *

வரவேற்புக் கமிட்டிக் கூட்டம் நாளை 24-7-44 திங்கள் மாலை 7 மணிக்கு பெத்துநாயக்கன்பேட்டை லாயர் சின்னதம்பி தெரு, 4-வது நிலையத்தில் டை மாநாட்டுக்கூட்டம் நடைபெறும்.

உறுப்பினர்களனைவரும் தவறாது வரவேண்டுகிறோம். காரியதரிசி.

## தெ. ஆ. மாவட்ட திராவிடர் மாநாடு

டை மாநாடு 29-7-44 ஆம்தேதி காலை 9 மணிக்கு திருப்பாதிரிப்புலியூர் முத்தையா ஹாலில் ராவ்பகதூர் வி. வி. ராமசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். வரவேற்புக் கழகத் தலைவர்: தோழர் மா. பீட்டர் பி. ஏ., திறப்பாளர்: பெரியார் ஈ. வெ. இராமசாமி, கொடியேற்றுபவர்: தோழர் தவமணி, திராவிடநாடு படத்திறப்பு: சி. என். அண்ணாதுரை, மற்றும் பல தோழர்கள் மற்றும் பல பணியாற்றுவார்கள். ஒலிபெருக்கி உண்டு.

## கோவை ஜில்லா தேவேந்திர வேளாளர் மாநாடு

கோயமுத்தூர்: திராவிட நாட்டு மாபெருந்தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் 13-8-44ல் கோவை ஜில்லா தேவேந்திர வேளாள மாநாடு அவனாசி சத்திரத்தில் நடைபெறும். அன்பர்கள் வருக!

கே. மருதாசலம்.

## மறைவு

சென்னை: 'இசை அரசு' தோழர் எம். எம். தண்டபாணி தேசிகர் அவர்களின் புதல்வன் முத்தையா சில நாள் நோய்வாய்ப்பட்டிருந்து இயற்கை எய்தினான் என்பதை அறிய வருந்துகிறோம்.

ஒரு மதராஸி யூனிட்

எழுதுவது:

"இவ்வெகுமதிகளை நாங்கள் பெறும்போது எங்களைப்பற்றி நமது ஜனங்கள் நினைத்துக்கொள்கிறார்கள் என்று தெரிந்துகொள்கிறோம்"

★

மேலும்

அதிக வெகுமதிகள் அனுப்ப தயவுசெய்து உதவுங்கள்

★

"துருப்புகளின் சௌகரியங்களுக்கு"

என்று குறிப்பிட்டு

மே. த. கவர்னர் யுத்தநிதிக்கு

பணம் தாராளமாகக் கொடுங்கள்.

## திராவிடர் பொதுக் கூட்டம்

(நமது நிருபர்)

சிதம்பரம்: தமிழர் நலஉரிமைச் சங்கத்தார், அண்ணாமலைப் பல்கலைக் கழக திராவிட மாணவர் ஆகியவர்களின் அரிய முயற்சியால் 15-7-44-ஆம் தேதி மாலை 7-30 மணிக்கு ஓர் பொதுக் கூட்டம் இராஜா அண்ணாமலை நகர மண்டபத் தோட்டத்தில் தோழர் சோழவந்தான் ஆவுடையப்பன் தலைமையில் தொடங்கப்பெற்றது. அதுபோழ்து தோழர்கள் இரெ. தண்டபாணி, க. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்), இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்), புலவர் நா. மு. மாணிக்கம் ஆகியவர்கள் "திராவிட இளைஞர் கடமை" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள்.

அண்மையில் சென்னைப் பல்கலைக் கழகத்தார் தொடங்கியு...

## திருவாரூரில் பெரியார் 'போர் வாள்' என்ற சீர்திருத்த நாடகம்

திருவாரூரில் 12-7-44-ல் 'போர் வாள்' என்ற சீர்திருத்த நாடகம் ராதா அவர்கள் குழுவினரால் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடத்தப்பட்டது. நாடகத்தின் சிறப்பைப்பற்றி தோழர்கள் பெரியார், அண்ணாதுரை முதலானவர்கள் சிறப்புற எடுத்துரைத்தனர். ராதா அவர்களின் நடிப்பின் திறமைக்கு அநேக வெள்ளி பரிசுகள் வழங்கப்பெற்றது.

---

சிரோன்மணி' என்ற வகுப்பிற்கு அமைக்கப்பட்டுள்ள பாடத் திட்டத்தில் 66 பாடல்களில், 64 தெலுங்குக் கீர்த்தனங்களும், 2 தமிழ்ப் பாடல்களுமாக சேர்த்திருப்பதைக் கண்டித்து, ஏகமனதாய் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பெற்...

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

குடி அரசு

1944-ஆம் ஜுலை-மீ 22-உ

# காந்தியார் சரணாகதி

சென்ற வாரம் "காந்தி நாடகம்" என்ற தலைப்பில் ஆச்சாரியார் வெற்றி பற்றி குறிப்பிட்டு விட்டு காந்தியார் சரணாகதி பற்றி இவ்வாரம் எழுதுவதாய் குறிப்பிட்டிருந்தோம்.

காங்கரசினுடையவும் காந்தியாருடையவும் கிளர்ச்சிகள் எல்லாம் துவக்கம் முதல் இன்று வரை தோல்வியிலேயே தான் முடிந்திருக்கிறது என்றும் ஆகஸ்ட் தீர்மான ஜம்பமும் படுதோல்வியில் தான் முடியுமென்றும் அப்போதே எழுதி இருக்கிறோம். ஆனால் இந்தத் தோல்வியானது காங்கரசுக்கும் காந்தியாருக்கும் சர்க்காரிடம்தான் ஏற்பட்ட தோல்வியாக முடியுமே ஒழிய, பொதுமக்களிடம் (பாமர மூடமக்களிடம்) காங்கரசுக்கும்காந்தியாருக்கும் "வெற்றி" யாகவேதான் முடிந்து வந்திருக்கிறது.

எப்படியெனில் நம்நாட்டுப் பாமர மக்களுக்குப் பகுத்தறிவு ஞானம் இருப்பதற்கு இல்லாதபடி கல்வி அளவும் மதப்படிப்பும் இருந்து வருவதால், அவர்கள் எளிதாக ஏமாற்றப்பட்டு விடுகிறார்கள். ஆதலால் இப்படிப்பட்டவர்களிடம் பித்தலாட்டப் பிரசாரகர்களுக்கே "வெற்றி" ஏற்படும். அந்த வகையில் பாமர மக்களின் செல்வாக்கை இம்மாதிரி போலியானதும் தோல்வியானதுமான கிளர்ச்சிகளால் காங்கரசும் காந்தியாரும் வெற்றி பெற்று விடுகிறார்கள். இவ்வித வெற்றி எவ்வளவுதான் இவர்களுக்கு ஏற்பட்டாலும் காரியத்தில் இவர்களுக்கு ஒன்றும் வெற்றி ஏற்பட்டுவிடப் போவதில்லை என்பதோடு இவர்களேதான் ஏமாற்றமடைந்து வரக்கூடும் என்பதிலும் நமக்கு எவ்வித சந்தேகமுமில்லை.

காந்தியாரின் கதர், இந்து முஸ்லிம் ஒற்றுமை, தீண்டாமைவிலக்கு முதலியவை ஏதும், இன்று வரை எத்தனையோ கோடி ரூபாய்செலவழிக்கப்பட்டும், எத்தனையோபேர் சிறை சென்றும் வெற்றி பெறாமல் மேலும் மோசமான நிலைக்கே நிலைமை போய்க்கொண்டிருக்கின்றன.

அவரது ஒத்துழையாமை, மறியல், சத்தியாக்கிரகம், பட்டினி ஆகியவைகளும் நல்ல தோல்வியையும், தோல்வியை ஒப்புக்கொண்டு மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டிய நிலைமையுமே அடைந்தன.

பலமான பூரணமஜாரிட்டியோடு ஏற்றுக்கொண்ட மாகாண ஆட்சிகளும் தோல்வியையே அடைந்து மக்களுக்குத் தொல்லையையும் காங்கரசுக்கு கெட்ட பெயரையும் ஏற்படுத்தி தாங்களாகவே விட்டுவிட்டு ஓடும்படி ஏற்பட்டதே தவிர ஒரு நல்ல காரியமோ அல்லது ஓட்டர்களுக்கு அளித்த வாக்குறுதியில் ஒரு கடுகளவை நிறைவேற்றவோ முடியாமல் போய்விட்டது.

மற்றபடி இத்தனை தோல்விகள்—இத்தனை பித்தலாட்டங்கள் செய்தது அற்ஞர் முன்னிலையில் இத்தனை மானம் கெட்ட தன்மை பெற்றதால் காங்கரசுக்கும், காந்தியாருக்கும் ஏற்பட்ட லாபம் என்னவென்றால் காங்கரசால் பார்ப்பனர் நிலை குலையாமல் இருக்கவும், காந்தியாரால் வடநாட்டார் தாராளமாய் கொள்ளை அடிக்கவும் நல்ல வசதி ஏற்பட்டது என்பது மாத்திரம் தான்.

இதை உணர்ந்து தான் காங்கரசால் காந்தியாரால் தொல்லைப்படும் மக்களாகிய திராவிடர்களும், முஸ்லீம்களும் தாங்கள் காங்கரசில் இருந்து பிரிந்தது மாத்திரமல்லாமல், தாங்கள் வாழும் நாட்டையும் காங்காரன் சம்மந்தத்திலிருந்து பிரித்துக் கொள்ள முடிவுசெய்து கொண்டார்கள்.

இதை காங்கரசோ காந்தியாரோ எந்தவிதமான காரணத்தையும் சொல்லி ஆக்ஷேபிக்க மறுக்கமுடியாமல் போய்விட்டதுடன், தங்கள் குற்றத்தை நினைத்து வருந்தவும் வேண்டிய நிலைக்கு வந்து கடைசியாகப் (பிரிந்துபோக) — ஒப்புக்கொண்டு தீர வேண்டிய நிலைமைக்கும் [illegible]டார்கள்.

காந்தியாரின் ஆகஸ்ட் தீர்மானத்திற்குக் காரணமாக இருந்த காரியங்கள் (1) கிரிப்ஸ் திட்டம். (2) ஜப்பான் ஜெயித்து விடும் பிரிட்டன் தோற்றுப் போகும் என்று இருந்த நிலை. (3) தாங்கள் சிறை சென்றுவிட்டால் பொது ஜனங்கள் பெரிய அராஜக குழப்பம் செய்து வெள்ளையர்களை வெட்டிக் குவித்து ரயிலைக் கவிழ்த்து அரசாங்க கட்டிடங்களை இடித்து கொளுத்தி அரசாங்கமே இல்லாமல் செய்து ஜப்பானுக்கு வாசல் திறந்து வழிவிட்டு வரவேற்று விடுவார்கள் என்ற தைரியம்.

ஆகிய இந்த எண்ணங்களே காந்தியாரை திடீரென்று "பிரிட்டன் வெளியேற வேண்டும்" என்று தீர்மானிக்கச் செய்தது.

இந்தியா முழுவதும் காங்கரசுக்கு கட்டுப்பட்டதாய் இருந்திருக்குமானால் ஒரு சமயம் காந்தியார் கருதியது கிறிதாவது காரியத்தில் நடக்கக் கூடியதாயிருந்திருக்கலாம்.

காந்தியாருக்கு முஸ்லீம்களின் ஆதரவும் திராவிடர்களின் ஆதரவும் இல்லை.

தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவும் இல்லை.

நடு நிலையில் இருந்து வேடிக்கை பார்த்த இந்துமகா சபையினரின் ஆதரவும் இல்லை.

போலி பொது உடமைக்காரர்கள் தாங்கள் தப்பினால் போதும் என்று உடனே சர்க்காருக்கு சரணாகதி அடைந்து விட்டார்கள்.

இவர்களைத் தவிர வேறு குறிப்பிடத்தக்கவர்கள் ஒருவரும் இல்லை என்பதோடு ஒருவருடைய ஆதரவும் காந்தியாருக்கு இல்லாமல் போய் விட்டது.

காந்திக்கு மகாத்மா பட்டம் கொடுத்த பார்ப்பனர்களும் அவர்களது பத்திரிகைகளும் பார்ப்பனர்கள் சமயத்திற்கு தகுந்தபடி பார்ப்பவர்கள் என்பது போல ஆகி விட்டார்கள்.

வட நாட்டு முதலாளிகளோ தாங்கள் தப்பினால் போதுமென்று தங்கள் பந்தோபஸ்துக்கே திண்டாடி விட்டார்கள்.

பிறகு என்ன வேண்டும்? சிறைப் பட்டவர்கள் "மனமாறுதலடைந்து" வெளிவரத் தவம் கிடைப்பதைத் தவிர வேறு ஒன்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

...ம் வேண்டாமல் போய்விட்டது.

முதலாவதாக ஆகஸ்ட் தீர்மானத்தின் பவுஷு-மானத்தைக் கெடுத்து காந்தியார் (விடுதலைக்கு) கடந்த பட்டினியேயாகும். அதை விதைவிட மோசமானது லின்லித்கோபிரபு காந்தியாருக்கு "நீர் ஜெயிலில் இருந்து தப்பிப்போவதற்கு ஆக இந்த பித்தலாட்டம் செய்கிறீர். உம்ம பட்டினியை ஒரு கை பார்க்கிறேன். நீர் செத்தாலும் சரி நான் உம்மை வெளியில் விடமாட்டேன்" என்று சொன்னாரே! அதிலிருந்தே ஆகஸ்ட் தீர்மானம் நொறுங்கித் தூளாகி அதன் கௌரவம் அடியோடு போய்விட்டது. இப்போதும் காந்தியார் விடுதலை அவரது காயலாவின் பேரால் ஏற்பட்டதால், அவர் போலி வீம்புக்கும் இடமில்லாமல் போய்விட்டது. அதோடுமாத்திரமல்லாமல் ஆகஸ்ட் தீர்மானம் செல்லுபடி அற்றது என்று அவராலேயே சொல்ல வேண்டியதாகவும் அதற்கு வக்கீல்களையும் சாட்சிக்கு தேட வேண்டியதாகவுமாயிற்று. இவ்வளவும் போதாமல் நிபந்தனை அற்ற மன்னிப்பும் கேட்டுக் கொள்ளப் பட்டு விட்டது. அதாவது,

14-7-44-ல் "சுதேசமித்திரன்" முதல் பக்கத்தில் 3-வது 4-வது பக்கத்தில் உள்ளபடி—காந்தியாரின் அறிக்கையில்,

1 சட்டமறுப்பை ஆரம்பிக்கும் நோக்கம் எனக்கு இல்லை. (அதாவது நான் இனிசட்டம் மீறுவதில்லை.)

2. முன் நிகழ்ந்தது இனி நிகழாது. (நாசவேலைகள் கலகத்தனங்கள் நடக்காமல் பார்த்துக் கொள்ளுகிறேன்)

3. 1942ம் வருஷத்து நிலைமைக்கு இனிமேல் இட்டுச் செல்ல மாட்டேன். (42ம் வருஷத்து தீர்மானங்களை குப்பைத்தொட்டியில் போட்டு விடுகிறேன்.)

4. சிவில் நிர்வாகத்தில் ஆதிக்கம் உள்ள தேசிய சர்க்கார் போதும். (வைசிராய் நிர்வாகசபையில் வேலை கொடுத்தால் போதும்)

என்கின்ற வாசகங்கள் காணப்படுகின்றன.

முதல் மூன்று வாசகங்கள் தாம் நிபந்தனை இன்றி மன்னிப்புக்கேட்டுக்கொள்ளும் தோரணையில் சர்க்காருக்குக் கொடுக்கும் வாக்குறுதிகளேயாகும்.

நாலாவது வாக்கியம் கிரிப்ஸ் திட்டத்திற்கும் குறைவான சுதந்திரம் கொடுத்தால் கூடப் போதுமானதாகும் என்று ஒப்புக்கொள்ளுவதாகும்.

கிரிப்ஸ் திட்டத்தின்போது சர். ஸ்டாப்போர்ட் கிரிப்ஸ் சிவில் நிர்வாகம் பூராவையும் காங்கிரஸ் முஸ்லிம் லீக்கிடம் ஒப்புவித்து, இராணுவமும் அதாவது கமேண்டரின் சீப் (சேனாதிபதியையும்) காங்கிரசிடம் ஒப்புவிப்பதாய்ச் சொல்லி சேனாதிபதியைப் பக்கத்தில் வைத்துக் கொண்டே கெஞ்சினார். அப்போது காந்தியார் "இந்த இரண்டும் போதாது வைசிராயே போய்விட வேண்டும்" என்றார். இப்போது சிவில் மாத்திரம் போதும் என்கிறார். என்றாலும் இந்த அறிக்கையால் காந்தியாரின் சரணாகதி தான் வெளியாயிற்று என்பதல்லாமல் காரியம் ஒன்றும் நடக்கப் போவதில்லை என்பது நமது அபிப்பிராயம். "ஊசியில் ஓட்டை இருந்தால்தான் நூல் கோர்க்க முடியும்" என்பதுபோல் இவர் ஒப்புக்கொண்ட நிபந்தனைகளுக்கு மற்ற கட்சியார் சம்மதித்தால்தான் தேசிய சர்க்காரோ சிவில் அதிகாரத்தில் மாத்திரமோ என்கின்ற பேச்சைப் பேச முடியுமே தவிர காந்தியார் அறிக்கையினாலேயே ஆகிவிடக்கூடிய காரியங்கள் அல்ல.

ஆகவே இப்போது நாட்டுப் பிரிவினையை சர்க்காரும் காங்கிரசும் ஒப்புக்கொண்டாய் விட்டது என்பது ஒன்று.

மற்ற கட்சியார் சம்மதிக்காமல் தேசிய சர்க்கார் இல்லை என்பது இரண்டு.

காங்கிரஸ் படுதோல்வி அடைந்து விட்டது என்பது மூன்று.

காந்தியார் சரணாகதி அடைந்துவிட்டார் என்பது நான்கு.

ஆகிய இந்த நான்கு காரியங்கள் காந்தியார் விடுதலையினால் மக்களுக்கு விளங்கும்படி ஏற்பட்டு விட்டன. இனி மற்றக் கட்சியார் இதுசமயம் சற்று ஜாக்கிரதையாகவே இருக்கவேண்டியது அவசியமாகும்.

லீக்குக்காரர்கள் ஜின்னா உள்ளமட்டும் கண்டிப்பாக [illegible] மாட்டார்கள் என்பது உறுதி. காங்கிரசும், சர்க்காரும் சில படித்த முஸ்லிம்களை தங்களுக்கு வசமாக்க சேகரிக்கலாம் என்றாலும் அதனால் லீக் பலப்படுமே ஒழிய அது ஆட்டம் கொடுத்துவிட முடியாது. அதுபோலவே பெரியார் ஈ. வெ. ரா. இருக்கும் மட்டும் திராவிடர்கள் சுலபத்தில் ஏமாந்துவிடுவார்கள் என்று சொல்லிவிட முடியாது என்றும் கூறுவோம்.

## வருந்துகிறோம்

கோவை ஜில்லா திராவிடர் கழகத்தின் செயலாளரும், சுயமரியாதை வீரருமான பெத்தாம்பாளையம் தோழர் ப. பழனிச்சாமி அவர்களின் தந்தையார் தோழர் ப. பழனிமுத்துக்கவுண்டர் அவர்கள் சுமார் 4, 5 மாதங்களாக உடல் நலமில்லாதிருந்து சென்ற 1-7-44-ஆம் தேதி தமது 54 வது வயதில் இயற்கை எய்திவிட்டார் என்பதை அறிந்து வருந்துகிறோம். தோழர் பழனிச்சாமி அவர்கள் வேளாள மரபைச் சேர்ந்தவர். பழையகோட்டை பட்டக்காரரின் இளைய மருமகனாரும் டிபுடி சூப்ரண்டுமான தோழர் குப்புசாமி அவர்களின் மூத்த சகோதரர். செல்வமும் செல்வாக்கும் மிகுதியும் படைத்தவர். அத்தகையவர், தமது தந்தையின் மரணச் சடங்குகளையும், இறுதிச் சடங்குகளையும், பார்ப்பன புரோகிதமின்றி நடத்திவைத்தார் என்பதை அறிந்து நாம் அவரது தைரியத்தைப் பாராட்டுகிறோம். பட்டக்காரர்களும் ஜமீன்தார்களும், கொங்கு வேளாள சமூக பிரமுகர்களும் எதிர்த்தும் அவர்கள் முன்னிலையிலே புரோகிதமில்லாமல் நடத்திவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும். பலமான சமூகக் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து பெரியோர்களுடைய எதிர்ப்புகளையும் சமாளித்துக்கொண்டு தமது கொள்கையை விட்டுக்கொடுக்காமல் உறுதியுடன் இருந்து தாமே முன்னின்று நடத்தி அச் சமூகத்திற்கே வழிகாட்டியாக இருந்ததைக் குறித்து மீண்டுமொரு முறை அவரைப் பாராட்டுகிறோம். இறுதிச் சடங்கன்று, சுமார் 500 ஏழை ஆதி திராவிடர்களுக்கு விருந்தளித்ததுடன் சுமார் 200 ஆண் பெண்களுக்கும் வேஷ்டியும் சேலையும் வழங்கினார் என்பதை அறிந்து மகிழ்ச்சியடைகிறோம். இவருக்கு, சமூகத்தார்-உறவினர் எதிர்ப்பு பலமாக இருந்தபோதிலும் இவரது சகோதரர்கள் குறிப்பாக இவரது இளைய சகோதரரும், டிபுடி சூப்ரண்டுமான தோழர் குப்புசாமியும், தாயாரும் இவருக்கு ஆதரவளித்தார்கள் என்பதை [illegible]

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

## பெரியார் ஈ. வெ. ரா.

ஈரோடு: பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திருச்சி, மண்ணச்சநல்லூர் ஆகிய இடங்களுக்குச் சென்றுவிட்டு 18ந் தேதி ஈரோடு வந்து சேர்ந்தார். 20-7-44ந் தேதி இரவு சிதம்பரம் தாலுகா வெள்ளியக்குடிக்குப் புறப்பட்டுச் செல்லுகிறார். 22ந் தேதி ஓமலூர் தாலுகா திராவிடர் இளைஞர் மாநாட்டில் கலந்து கொள்வார். அடுத்த வாரத்தில் திருப்பாதிரிப்புலியூர் தெ. ஆ. மாவட்ட திராவிடர் மாநாட்டிலும், சென்னை ச. ம. மாநாட்டிலும், சந்திரோதயத்திலும் கலந்து கொள்வார்.

## சென்னையில் சந்திரோதயம்

சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் 31-7-44 திங்கள் இரவு 9 மணிக்கு,

சந்திரோதயம்

(சமூக சீர்திருத்த நாடகம்)

பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

## மணச்சநல்லூரில் பொதுக் கூட்டம்

மணச்சநல்லூரில் 17-7-44-ல் தோழர் எம். ஜி. அழகப்பிள்ளை அவர்கள் தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் மாலை 7 மணிக்கு நடந்தது. அதில் தன்னுணர்வு இயக்கத் தந்தை பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையைப் பற்றியும், திராவிடர் நிலையைப் பற்றியும் சுமார் 2 மணி நேரம் உணர்ச்சி ததும்ப மக்கள் மனதில் நன்கு பதியும்படி எடுத்துரைத்தார். தோழர் பாஷா அவர்களும் பேசினார். பின் வந்தனோபசாரத்துடன் இரவு 10 மணிக்கு கூட்டம் முடிந்தது.

பெரியார் அவர்களை ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். வழி நெடுக மாலைகள் போடப்பட்டன.

பெரியார் அவர்களுக்கு ஆண்டியப்ப செட்டியார் அவர்களின் "திராவிடர் சிற்றுண்டிச் சாலை"யில் சிறந்த விருந்து அளிக்கப்பட்டது.

---

குடும்பம் அச் சமூகத்திற்கே சொந்த நாட்டுவேளாளர்களுக்கே வழிகாட்டியாக விளங்கும் என்று கருதுகின்றோம். இவ்வாறு செல்வவந்தர்கள் புரோகிதத்தை ஒழிக்க முன்வருவார்களேயானால், வெகு சீக்கிரத்தில் ஆரியமே இந்நாட்டை விட்டொழியும் என்பதில் சந்தேகமில்லை. அந்நன்னாளை விரைவில் எதிர்பார்ப்போமாக.

ரோஜா முத்தையா

## தஞ்சை மாவட்ட திராவிட வாலிபர் மாநாடு

தஞ்சை: 11-7-44-ஆந் தேதி புகை வண்டி நிலையத்திலிருந்து காலை 9 மணிக்கு தலைவர்களை ஊர்வலமாக அழைத்துக்கொண்டு போகப்பட்டு ஏ. ஒய். பரிசுத்த நாடார் பங்களாவிற்குள் அமைந்திருந்த சர் ஏ. டி. பன்னீர்செல்வம் பந்தலில் மாநாடு நடைபெற்றது. தோழர் கே. கே. நீலமேகம் பலர் கைதட்டலுக்கிடையே கொடியேற்றிவைத்தார். பின்னர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் அரிய சொற்பொழிவாற்றி மாநாட்டைத் திறந்துவைத்தார். வரவேற்புக் கழகத் தலைவர் டி. எம். குருசாமி அவர்கள் வரவேற்புரையை வாசித்தார். தோழர் டபிள்யு. பி. ஏ. சௌந்தரபாண்டியன் அவர்கள் தலைமை தாங்கி, தமது முகவுரையாக அரியதோர் சொற்பொழிவாற்றினார். பின்னர் ராவ்சாஹிப் தோழர் வி. வி. ராமசாமி அவர்கள் திராவிட நாட்டுப் பிரிவினையையும், திராவிட நாகரிகத்தையும், திராவிட நாடு பிரிவினையால் வரும் நன்மையையும் மக்களுக்கு எடுத்துச் சொன்னார்.

பச்சையப்பன் கல்லூரி தோழர் ஜனார்த்தனம் பி. ஏ., சர் ஏ. டி. பி. செல்வம் அவர்கள் படத்தைத் திறந்து வைத்தார். மாநாடு இடைவேளை சாப்பாட்டிற்குக் கலைந்தது.

மீண்டும் மாநாடு 3 மணிக்கு ஆரம்பமாயிற்று. தலைவர் பாண்டியன் சொற்பொழிவு நிகழ்த்தினார். தலைவரால் தீர்மானங்கள் வாசிக்கப்பட்டன. அவை மாநாட்டாரால் ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அதே பந்தலில் தோழர் பாண்டியன் தலைமையில் பொதுக் கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர் இரா. நெடுஞ்செழியன் பி. ஏ. (ஆனர்ஸ்) திராவிட நாட்டுப் பிரிவினை பற்றிப் பேசினார். மற்றும் தோழர்கள் ஜனார்த்தனம் பி. ஏ., தவமணிராசன், பி. குழந்தையா, குரு. ராமலிங்கம், திருப்பூர் எஸ். ஆர். சுப்பிரமணியம், எம். கே. அலீன், 10 வயதுள்ள மாணவன் மாசிலாமணி, அ. பொன்னம்பலனார், சி. என். அண்ணாதுரை எம். ஏ., முதலியவர்கள் பேசின பிறகு நீதிக் கட்சி தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. பேசினார்கள். வரவேற்புக் கழகத் தலைவர் தோழர் டி. எம். குருசாமி அவர்களால் நன்றி கூறப்பட்டது.

## நீத்தார் கடன்

திருச்சினாப்பள்ளி: இம்மாராய சமுத்திரம் கிராமம் தோழர் பொன்னுசாமி அன்னையார் மருதாய் அம்மாள் [illegible] யெய்ததை முன்னிட்டு

## திருச்சியில் சுயமரியாதை மாநாடு

திருச்சியில் 16-7-44ல் முனிசிபல் பள்ளிக் ஹாலில் சுயமரியாதை மாநாடு புரட்சிக்கவி பாரதிதாசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டிற்கு என்றுமில்லாத அளவு மக்கள், பெண்கள் உள்பட குழுமியிருந்தனர். எங்கும் ஒரே உணர்ச்சியும், குதூகலமும் நிரம்பி இருந்தது.

தோழர்கள் டி. பி. வேதாசலம், எஸ். ஆர். சுப்பிரமணியம், பெரியார் ஈ. வெ. ரா. முதலானவர்கள் முறையே வரவேற்புரை, கொடியேற்றுதல், திறப்பு விழா முதலியவைகளை நிகழ்த்தினார்கள்.

மற்றும் தோழர்கள் சி. என். அண்ணாதுரை, அன்பழகன், டி. வி. நாராயணசாமி, அ. பொன்னம்பலம், விருதாசலம் வி. ஜி. குல்கர்னி, ஆசைத்தம்பி, வைச. சண்முகம், எஸ். தனபாக்கியம் முதலானவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். தீர்மானங்களும் [illegible] தோழர்களால் பிரேரேபிக்கப்பட்டும், ஆதரிக்கப்பட்டும் சிறப்புற நிறைவேறிற்று. மாலை 7 மணிக்கு மாநாடு வந்தனோபசாரத்துடன் இனிது கலைந்தது.

## தமிழ் மாகாண சித்த வைத்திய மாநாடு ஒத்திவைப்பு

ஷை மாநாடு ஈரோடு, மகாஜன உயர்நிலைப் பள்ளி, சரஸ்வதி மண்டபத்தில் 1944 ௵ ஜூலை மாதம் 29, 30 சனி ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் நடக்கவிருந்தது. ஆனால், சிலத் தோழர்களின் உடல்நலமின்மையாலும், மற்றும் சில தவிர்க்கவியலாதக் காரணங்களாலும் ஷை மாநாடு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. தேதி, முதலிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இங்ஙனம்,
ஈ. வெ. கிருஷ்ணசாமி,
வரவேற்புக் கழகத் தலைவர்.

## திருவாரூர் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம்

ஷை மன்றத்தின் தேர்தல் 7-7-44 மாலை 5 மணிக்கு திருவாரூர் காரைக்காட்டுத் தெருவில் தோழர் விசயராகவன் தலைமையில் நடந்தது. மன்றத்தின் தலைவராக தோழர் மு. கருணாநிதி, அமைச்சராக தோழர் கே. வெங்கடாசலம் நிர்வாக உறுப்பினர்களாக பல தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எதிர்கால வேலைகள் திட்டமிடப்பட்டது. வரவு செலவு கணக்கு பார்க்கப்பட்டது.

---

14-7-44-ல் தி. தா. வேம்பூர் தோழர் முனியாண்டி அவர்கள் தலைமையில் புரோகிதமின்றி நீத்தார் கடன் நடைபெற்றது.

## நெல்லை மாவட்ட 1வது திராவிட இளைஞர் மாநாடு

டை மாநாடு 8, 9-7-44ல் தூத்துக்குடி ஸ்டேஷன்கூடபுரத்தில் அமைக்கப்பட்டிருந்த 'டாக்டர் நாயர்' பந்தலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. 8-7-44 தேதி மாலை 4 மணி வண்டிக்கு வந்து இறங்கிய தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களையும் மற்றவர்களையும் ரயில்வே ஸ்டேஷனத்தில் வரவேற்று பாண்டு வாத்தியங்களுடன் முக்கியமான தெருக்கள் வழியாய் காரில் அழைத்துக் கொண்டு போய் ஊர்வலம் 6 மணிக்குப்பந்தல் வந்து சேர்ந்தது. ஆரம்பத்தில் நீதிக் கட்சியின் கொடியை சென்னை தோழர் பி. ஜனார்த்தனன் ஏற்றி வைத்தார். பின் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்து சுமார் 1 மணி நேரம் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார். பின் வரவேற்புக்கழகத் தலைவர் தோழர் எஸ். ஒ. வெற்றிவேல் தனது வரவேற்புரையை வாசித்தார். மாநாட்டுக்குத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் கே. அன்பழகன் பி. ஏ. (ஆனர்ஸ்) அவர்களின் சொற்பொழிவுடன் மாநாடு இரவு 10 மணிக்கு முடிந்தது.

மறுநாள் 9ம் தேதி காலை 10 மணிக்கு மாநாடு தோழர் அன்பழகன் தலைமையில் மீண்டும் ஆரம்பமானது. ஆரம்பத்தில் ஈ. வெ. ரா. நாகம்மாள் அவர்களின் சேவையைப்பற்றி தோழர்கள் மூவலூர் இராமாமிர்தம் அம்மாளும், பன்னீர் செல்வம் சேவையைப்பற்றி மணி அம்மையாரும், டாக்டர் நாயர்—பனகால்—தியாகராயர் இவர்கள் சேவையைப்பற்றி பொன்னம்பலனாரும் விரிவாகப் பேசினார்கள். அதன் பின் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் சுமார் ஒரு மணி நேரம் "நமது எதிர்கால வேலைத் திட்டம்" என்பதைப்பற்றி மிக விளக்கமாக 1 மணி நேரம் வரை பேசிவிட்டு மதியம் 1½ மணி வண்டிக்கு திண்டுக்கல்லுக்குப் போய் விட்டார். பின் தோழர் அண்ணாதுரையின் சேவையைப்பற்றி குடந்தை தோழர் எஸ். கே. சாமியும், பெரியார் ஈ. வெ. ரா. சேவையைப்பற்றி பாவலர் பாலசுந்தரமும் விளக்கமாகப் பேசியபின் மாநாடு மதியம் 2 மணிக்கு சாப்பாட்டிற்காக ஒத்தி வைக்கப்பட்டது.

மாலை 4 மணிக்கு மாநாடு மீண்டும் ஆரம்பமானது. தோழர் ஆர். நெடுஞ்செழியன் அவர்கள் விரிவாகப்பேசி திராவிட நாட்டுப்படத்தைத் திறந்து வைத்தார். பின் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது. முடிவுரையாக தலைவர் அன்பழகன் அவர்கள் திராவிட மக்களின் கடமை என்ன என்பதை விளக்கமாக பேசியபின் மாநாடு இரவு 9 மணிக்கு இனிது கலைந்தது. காரியதரிசி சிவசாமி வந்தனோபசாரம் கூறினார்.

மாநாடு முடிந்ததும் இரவு 9½ மணிக்கு அதே மாநாட்டுப் பந்தலில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் பரமன்குறிச்சி தோழர் முத்தையன் பெருமாள் நாடார் அவர்கள் தலைமையில் நடந்தது. சுமார் 6000 மக்கள் குழுமியிருந்தனர். ஒலி பெருக்கியும் வைக்கப்பட்டிருந்தது. 'திராவிட மக்களின் எதிர்கால நிலை' என்பதைப்பற்றி விரிவாக தோழர்கள் ஜனார்த்தனன், அன்பழகன், நெடுஞ்செழியன், எஸ். கே. சாமி, அருப்புக்கோட்டை பழனிச்சாமி இவர்கள் பேசியபின் மாநாட்டுக் கூட்டுக்காரியதரிசி தோழர் டி. தங்கையா ஆரோன் வந்தனோபசாரம் கூற கூட்டம் நடு இரவு 1¼ மணிக்கு இனிது கலைந்தது. பொதுக்கூட்டத்திலே 'நெல்லை ஜில்லா திராவிடர் கழகத்துக்கு' நிர்வாக உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

குறிப்பு: பொதுக்கூட்டத்தில் பெரியார் ஈ. வெ ரா. அவர்களின் உருவச் சிலையை சென்னையில் திறப்பதற்கு நிதி திரட்டப்பட்டது. ரொக்கப்பணமாக ரூ. 55-8-11 கூட்டத்தில் அது வரைக்கு வசூலிக்கப்பட்டதுடன் இன்னும் 95 தருவதாக சில தோழர்களும் கூட்டத்தில் வாக்களித்தார்கள். ஆகவே அது வரைக்கு தூத்துக்குடியில் மட்டும் ரூ. 150-8-11 சேகரிக்கப்பட்டது.

## அண்ணாமலை நகர் பல்கலைப்புலவர் பாராட்டுக்குழு

ஐயன்மீர்! பல்கலைப்புலவர் தோழர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல்., அவர்கள் போராசிரியர் பதவியில் நின்று 1-7-44 முதல் ஓய்வு பெற்றனர். அவர்கட்கு ஒரு பொற்கிழி அளிக்கத்தக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இதைக்கண்ணுறும் தமிழ் அன்பர்கள் தங்களாலான பொருளுதவி விரைந்து செய்துதவுமாறு வேண்டுகிறேன்.

கு.ம. சுப்பிரமணியன், செயலாளன்.

## மறைவு

அருப்புக்கோட்டை: தோழர் க. அ. புன்னைமுத்து அவர்களின் இளைய மகன் ஓராண்டு புதல்வன் நோய்வாய்ப்பட்டு சென்ற 11-7-44-ஆம் தேதி இயற்கை எய்தினான் என்று அறிய விசனிக்கிறோம்.

## விற்பனைக்கு

"குடி அரசு" பத்திரிகை விற்பனைக்கு கீழ்க் கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

R. சுப்ரமண்யம்,
நெ. 155, 4வது பிளாக்,
[illegible] கட்டிடம் சமீபம்,
[illegible]

## சமரசம்

பெரியார் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் 3-9-41ல் வாழ்க்கை ஒப்பந்தம் செய்து கொண்ட பெரம்பலூர் தாலுகா சிறுகன்பூர் முத்துகிருஷ்ணசாமிக்கும் பச்சையம்மாளுக்கும் பிறந்த முதல் ஆண்மகவுக்கு 23-6-44ல் தோழர் ம. விருத்தாசலம் எம்.ஏ. அவர்கள் தலைமையில் நடைபெற்ற விழாவில் பெருவளப்பூர் டாக்டர் சி. வா. பாலகிருஷ்ணன் அவர்களால் சமரசம் என்று பெயரிடப்பட்டது.

## மறைவு

சென்னை: வண்ணையம்பதி, மணியக்காரர் சத்திரத்திலுள்ள கே. ஏ. [illegible]வினது செல்வம் நினைவு விளையாட்டுக் கழக ஆயுள் புரவலர் பெ. ரா. மா. குப்புசாமி நாடார் அவர்கள் 14-7-44-ஆம் நாள் இரவு 9-30 மணிக்கு இயற்கையெய்தினார். அவர்கள் குடும்பத்தாருக்கு நாங்கள் எங்கள் இதயபூர்வமான அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம் என டை கழக செயலாளர் தெரிவிக்கிறார்.

* * *

பல்லடம்: இவ்வூர் பிரபல வர்த்தகரும், நகர யூனியன் சேர்மனுமான ஆலி ஜனாப் ஏ. கே. அப்துல் அஜீஸ் சாகிபுவின் துணைவியார் 7-7-44ல் காலமானார். 8-ஆம் தேதி நல்லடக்கம் செய்யப்பட்டது.

## "இரணியன்"

தஞ்சை பள்ளியக்கிரகாரம், இலவச வாசகசாலையார் 8-7-44 தேதி இரவு 10-30 மணிக்கு இரணியன் என்ற நாடகத்தை தஞ்சை நகரசபைத் தலைவர் இராவ்சாகிப் ஈ. ஒய். அருணாசலசாமி நாடார் அவர்கள் தலைமையில் தஞ்சை Y. M. L. A. கொட்டகையில் வெகு சிறப்பாக நடத்தது.

---

அறிக்கை எண் 2:

## தலைவர்களின் உருவப்படங்கள்

### விற்பனைக்குத் தயார்!

எம்மிடம், நீதிக்கட்சித்தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்களுடையவும், மர்மமாக மறைந்த சர். A. T. பன்னீர்செல்வம், நம் தளபதிகளான C N. அண்ணாதுரை M. A., கோவை S. R. சுப்ரமண்யம், N. அர்ச்சுனன், C. P. சின்னராசு, பாவலர் M. S. பாலசுந்தரம், மாணவமணிகளான R. நெடுஞ்செழியன் B. A. (Hons), P. ஜனார்த்தனம் B.A. மற்றும் பலரின் படங்கள் மொத்தமாகவும், சில்லரையாகவும் குறைந்த விலைக்குக் கிடைக்கும். வேண்டுவோர் எழுதுக.

முகவரி:
K. K NAIDU, PHOTO STORES,
MAIN BRIDGE ROAD,
SALEM.





## சாத்தூர் செய்திகள்

திருநெல்வேலி ஜில்லா திராவிடர் இளைஞர் மாநாட்டுக்கு சென்ற பெரியார் ஈ. வெ ராமசாமி அவர்களை சாத்தூர் புகைவண்டி நிலையத்தில், ஏராளமான மக்கள் கூடி சாத்தூரிலும், சுற்றுப்புற கிராமங்களிலும் உள்ள பல சங்கங்களின் சார்பாக நூற்றுக்கணக்கான மலர் மாலைகள் சூட்டி கண்டு பேசினார்.

* * *

சாத்தூரில் டாக்டர் அம்பேத்கார் வாசகசாலை & புட்பால் கிளப் ஒன்றை புதிதாக சென்ற வாரத்தில் தோழர் டி. தங்கைய நாடார் அவர்கள் திறந்து வைத்தார்கள். டாக்டர் அம்பேத்காரைப் பற்றியும், பெரியாரின் சேவைபற்றியும் தோழர்கள் பி. இராஜமணி, சின்னைப்பன், செபஸ்டியன் முதலியோர்கள் பேசினார்கள்.

* *

சாத்தூர் கே. எ. பி. விசுவநாதம் வாசகசாலை இவ்வருட நிர்வாகக் கமிட்டிக்கு தோழர் டி. தங்கைய நாடார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்.

## பிறப்பு

தூத்துக்குடி தெ. இ. ந. உ. சங்க செயலாளர் எம். என். சிவசுவாமியின் துணைவியார் இராஜம்மாளுக்கு ஜூன் மாதம் 22 தேதி ஓர் ஆண் மகவு பிறந்து சிவராஜநபன் என்று பெயரிடப்பட்டிருக்கிறது. தாயும் சேயும் நலமாயிருப்பதை முன்னிட்டு 'குடி அரசு' வளர்ச்சிக்காக ரூ. 1 அன்பளிப்பு அனுப்பப்பட்டது.

## மணமகள் தேவை

நாடார் வகுப்பைச் சார்ந்தவரும், கடுத்தர சொத்துடையவரும், பஜாரில் கடை வியாபாரம் செய்து தகுந்த வருமானம் உடையவரும் 27 வயதுடைய வாலிபருக்கு நாடார் வகுப்பைச் சார்ந்த நல்ல அழகுடைய மணமகள் தேவை. விபரத்திற்கு எழுதுக.

P. P. C/o 'குடி அரசு' ஆபீஸ்.

## தமிழ் நாட்டுச் செய்திகள்

அவலூர்பேட்டை: தெ. ஆ. ஜில்லா செஞ்சி தாலுகா அவலூர்பேட்டை கிராமத்தில் 1-7-44-ஆம் தேதி காஞ்சிபுரம் தோழர் டாக்டர் சி. கே. குப்புசாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் பி. கோபால் அவர்களைத் தலைவராகக் கொண்ட "பகுத்தறிவாளர் சங்கம்" ஒன்று நிறுவப்பட்டது.

சென்ற 26-6-44-ஆம் தேதி ஷையூரில்

## காலமானார்.



சென்னிமலை திரு. V. S. முருகேச முதலியார் அவர்கள் தமது 62ம் வயதில் 4-7-44-ந் தேதி மாலை 6-15 மணிக்கு காலமானார். அவர் கோயம்புத்தூர், திருப்பூர், தாராபுரம், ஈரோடு, திருச்சிறாப்பள்ளி முதலிய இடங்களில் பிரபல பஞ்சு, நூல், ஜவுளி வியாபாரியாகவும், ஈரோடு பர்மா ஷெல் கம்பெனி ஏஜண்டாக 20 வருஷ காலமாகவும், சென்னிமலை ஸ்ரீ தண்டபாணி பாங்கின் காரியதரிசியாக டை. பாங்க் ஆரம்ப முதல் கொண்டு 22 வருஷ காலமாகவும், கோயமுத்தூர் ஸ்ரீ சாரதா மில்ஸ் மேனேஜிங் ஏஜெண்ட்ஸ் பார்ட்னராகவும், ஈரோடு தாலுகா போர்டு அங்கத்தினராகவும், சென்னிமலை பஞ்சாயத்து போர்டு பிரசிடெண்டாகவும், இவ்வூர் ஏழைகளின் உணவுப்பொருள் டிப்போ லைவ் பிரசிடெண்டாகவும், இன்னும் பல பொதுநல ஸ்தாபனங்களில் முக்கியஸ்தராகவும், பல ஏழை மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் அளித்து வந்தார். இவர் V. S. A. பிரதர்ஸ் என்ற 6 சகோதரர்களுள் ஒருவர். மனைவி, ஏககுமாரரான V. S. M. நஞ்சப்பா, மூன்று குமாரத்திகள், பல பேரன், பேத்திமார்கள், மற்றும் அநேக சுற்றத்தார்கள், நண்பர்கள் எல்லோரையும் வருந்தவிட்டு மறைந்தார். இவர் ஆத்மா சாந்தி அடைகுக!

தோழர் எ. கே. எ. சௌண்டைய ... டியார் தலைமையில் கைத்தறி ... ளாளர் சங்கத்தின் முதலாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. காஞ்சிபுரம் டாக்டர் சி. கே. குப்புசாமி பேசினார்.

* * *

கடையநல்லூர்: சுதுமாணியா முஸ்லீம் சங்கத்தின் 7-வது வருட விழா 4-7-44-ல் ஜனாப் கே. எஸ். முகம்மது மருது சாஹிப் தலைமையில் கொண்டாடப்பட்டது. அது சமயம் 25-6-44-ல் அகால மரணமடைந்த சமஸ்தான முஸ்லீம் லீக் தலைவர் நவாப் யார்ஜங் பகதூர் (மர்ஹூம்) அவர்கள் மரணத்திற்கு வருந்துவதாக ஓர் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பல பொருள் பற்றி பலர் பேசினர். நடப்பு வருடத்திற்கு நிர்வாகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

* * *

ஈரோடு: இந்தி எதிர்ப்பில் சிறை சென்ற கருங்கல்பாளையம் தோழர் எஸ். என். பழனிவேலு அவர்களின் புதல்வி சிறைவாசத்திற்கும் அவரது தம்பி எஸ். என். ரத்தினத்தின் புதல்வி சண்பகவல்லிக்கும் 12-7-44-ஆம் தேதி சாதனை வைபவம் நடந்தது. அதுசமயம் மௌலவி அப்துல் கனி சாஹிப் தலைமையில் தோழர்கள் பி. சண்முகவேலாயுதம், மாணிக்கவாசகம், ராமானுஜம் முதலியவர்கள் சீர்திருத்தம் என்பது பற்றி பேசினார்கள். இதன் நினைவாக 'குடி அரசு', 'திராவிட நாடு' ஆகிய பத்திரிகைகளுக்கு நன்கொடை முறையே ரூ. 1 அளிக்கப்பட்டது.

* * *

மாராந்தை:- ஆதிதிராவிட வாலிபர் ஐக்கிய சங்கத்தின் பொதுக்கூட்டம் 5-7-44ல் சங்கத்தலைவர் த. க. முத்தையா அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. 'குடி அரசு' 'திராவிட நாடு' முதலிய பத்திரிகைகளைப் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார், காரியதரிசி மா. ச. கோவிந்தசாமி அறிக்கை வாசித்தார். வரவு ரூ. 177. செலவு ரூ. 30. மீதி ரூ. 147.

குறிப்பு:- மேற்காட்டிய சங்கத்தின் பெயரால் ஏற்படுத்தப்போகும் வாசகசாலைக்கு கொழும்பிலுள்ள நண்பர்கள் ரூ. 177 வரை நன்கொடை அளித்தமைக்காக தனித்தனியே நன்றி செலுத்த முடியாமைக்கு வருந்தி இப்பத்திரிகை மூலம் தங்களுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம் எனக் காரியதரிசி எழுதுகிறார்.

* * *

Edited Printed and Published by N. Karivaradaswamy at the Tamil ... Press ...

ரோஜா முத்தையா